*(Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: CC. 160/2021*

*Deposition of Witness for Prosecuting/Defence/Court PW- 1 (Lw-1)*

*Name / Father's Name:* சுரேஷ்குமார் த/பெ.ராமலிங்கம்

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of* 30.03.2023

**முதல் விசாரணை**

நான் பெரம்பலூரிலுள்ள நெய்குப்பை கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த போன திருவேஷ் எனது மகன் ஆவார். காயம்பட்ட பிரசாந்த் எனது மைத்துனர் மகன் ஆவார். கடந்த 11.09.2020 ம் தேதி எனது மகன் திருவேஷ் மற்றும் பிரசாந்த் இருவரும் இருசக்கர வாகனத்தில் காலையிலே வெளியே சென்று விட்டார்கள். நான் மாலை 5.30 மணியளவில் எனது மகனுக்கு செல்போனில் தொடர்பு கொண்டு எங்கே இருக்கிறாய் என்று கேட்ட போது புளியஞ்சோலையில் குளிக்க சென்றதாகவும் இரவு 07.00 மணிக்குள் திரும்ப வந்துவிடுவதாகவும் சொன்னார். பிறகு மாலை 6.30 மணியளவில் அழகேசன் என்பவர் எனக்கு போன் செய்து தம்மம்பட்டி பிரிவு ரோடு வலசக்காடு என்ற இடத்தில் மாருதி கார் மோதி திருவேஷ் மற்றும் பிரசாந்த் ஆகியோர்களுக்கு அடிப்பட்டு விட்டதாகவும் அவர்களை சிகிச்சைக்காக ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கும் அங்கியிருந்து மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கும் கொண்டு சென்றதாக சொன்னார். நான் சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது திருவேஷ்-க்கு தலை, நெஞ்சு ஆகிய பகுதிகளில் அடிப்பட்டும் மற்றும் பிரசாந்த்-க்கு காலில் அடிப்பட்டும் மயக்க நிலையில் இருந்தார்கள். பிறகு இரவு 8.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி எனது மகன் திருவேஷ் இறந்துவிட்டதாக மருத்துவர் என்னிடம் சொன்னார். விபத்து ஏற்படுத்திய காரை ஓட்டி வந்தவர் பெயர் பிரபாகரன் என்று சொன்னார்கள். நடந்த சம்பவம் பற்றி தம்மம்பட்டி காவல் நிலைய போலீசார் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான்.

அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.**1 ஆகும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நடந்த விபத்து பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். சாட்சிகள் அழகேசன், பிரசாந்த், ஐயப்பன், அண்ணாதுரை, சின்னசாமி, மணி, பாலகிருஷ்ணன் ஆகியோர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். மேற்படி சாட்சிகள் எனது உறவினர்கள் என்றால் இல்லை. எனது மகன் எந்த ஊருக்கு செல்வதாக என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். விபத்து பற்றிய தகவல் தெரிந்து சேலம் அரசு மருத்துவமனைக்கு நான் செல்லும் போது 8.45-9.00 மணி இருக்கும். என்னுடன் யார் யார் வந்தார்கள் என்றால் அது பற்றி தற்போது ஞாபகமில்லை. புகார் வாக்குமூலத்தை போலீசார் எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் கேள்விபட்டது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும் எனது மகன் கவனக்குறைவாக இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்று எதிரி ஓட்டி வந்த காரின் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தி கொண்டார் என்றும் எதிரிக்கும் நடந்த விபத்திற்கும் சம்மந்தமில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

ஒம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.